முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 16—8—57 வெள்ளி | ஒலி 17

அன்று ஜான்சி ராணியை நாடு கண்டது! இன்று ...?



தலைகொடுத்தோர் மறைந்து போனார்- கொலை செய்தோர் சிலையானார்!

1857-1957

—இடையிலே உள்ள நூறாண்டுகளில் சரித்திரம் திரும்பியிருக்கிறது இந்த இடைக் காலத்தைப் பற்றி வர்ணிக்கும் ஏடுகளிலே இரத்தக் கறை படிந்திருக்கிறது.

—இப்படியெல்லாம் பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள் விடுதலைக் கிளர்ச்சியின் நூற்றாண்டு விழாவினைப்பற்றிப் பேசுவோர்!

குழந்தையை முதுகிலே சுமந்தபடி ஏகாதிபத்திய எத்தர்களை நோக்கி வாள் சுழற்றிய ஜான்சி ராணி—அவர்கள் கண்முன்னால் நடமாடுகிறாள்!

இந்த நூற்றாண்டு விழா அந்த வீராங்கனைக்கு ஒரு பாராட்டு!

நாட்டு விடுதலைக்காகத் தனது தலைகளை விலையாகக் கொடுத்த வீரர்களுக்கு வாழ்த்து!

ஜான்சி ராணி மட்டுமல்ல; பகதூர் ஷா, தாந்தியாதோப் போன்றோரின் தியாகமும் சிலமும் இந்த நேரத்திலே நினைவு படுத்தப்படுகிறது!



இந்த அவமானச் சின்னங்களில் இப்போது அகற்றப்பட்டிருப்பது வெலிங்ட்டன் சிலை மட்டுமே!

ஆனால் இந்த விழா வெள்ளை ஆதிபத்தியத்தை எதிர்த்து முதன் முதலாகக் கிளர்ச்சி தொடங்கியது நூறு ஆண்டுகளுக்கு முன்புதான்—என்பதையும் ஒப்புக்கொள்வதாக இருக்கிறது!

அதற்கு வெகு ஆண்டுகள் முன்னதாகவே பாஞ்சாலங்குறிச்சிச் சீமையிலிருந்து கொந்தளிக்கும் கடலாக; குமுறும் எரிமலையாகக் கொள்ளையடிக்க வந்த வெள்ளையர் ஆதிக்கத்திற்கு வேட்டு வைக்க முயன்ற மாவீரன்—மறவர் தலைவன் கட்டபொம்மனின் வீர வரலாற்றை—கயத்தாற்றிலே தாயகத்திற்கெனத் தருவதற்கு என்னிடம் ஒரே ஒரு உயிர்தானே இருக்கிறது—என்ற சஞ்சலத்தோடு அவன் கொடுத்த உயிர்த் தியாகத்தை—ஒரு முறை உள்ளுதற்கும், போற்றுதற்கும் வெள்ளையனை விரட்டியதாகப் பெருமைப்பட்டுக் கொள்ளும் தேசிய வீரர்களால் முடியாமற் போய் விட்டது!

பதினைந்துநாட்களுக்குள்ளே பார்புகழும் கோட்டை கட்டி; பீரங்கிப் படையை எதிர்த்து நின்ற வீரர்குல திலகம் ஊமைத் துரைக்கு இந்த நூற்றாண்டு விழாவிலே இடமில்லை!

ஏன்?

பாவம்; அவர்களெல்லாம் தென்னகத்திலே பிறந்துவிட்டவர்கள்—தமிழினத்தோடு ஒன்றி விட்டவர்கள்—அதனால் தான் பித்துபிடித்த வடநாட்டு ஆட்சி பீடத்தவர்களும், அவர்களது அடி வருடிகளும் அவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை!

பாவம்! கட்டபொம்மனையும், அவனது அன்புத் தம்பியையும்தான் அவர்கள் நினைவு கொள்ளவில்லை. அவர்கள் எழுப்பிய விடுதலைமுழக்கத்தை நிறுத்துவதற்குப் பாடுபட்ட வெள்ளைத் தளகர்த்தர்களுடையவும், வெள்ளை ஆதிபத்யத்துச் சின்னங்களாக விளங்குபவர்களுடையதுமான நினைவுச் சின்னங்களையாவது அகற்றுவதற்கு முயன்றிருக்கிறார்களா, ஆளவந்தார்கள்?

இல்லை!

வெலிங்டன்—என்னும் கொடுங்கோலன் சிலை மட்டும் தான் மவுண்ட்ரோடிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறது!

மற்றபடி ராணிகளும், ராஜாக்களும், கவர்னர்களும்—நின்றபடி, உட்கார்ந்தபடிதான் இருக்கிறார்கள்—பூரண சுதந்திரம் பெற்றதாகச் சொல்லப்படும் பாரதப் புத்திரர்களின் 'வீரத்தை' எள்ளி நகையாடியபடி!

"பார்த்தாயா விக்டோரியா! செக்கிழுத்துச் செத்துப்போன சிதம்பரத்திற்குச் சிலையில்லை, இந்தச் சிங்காரச் சென்னையிலே! கையிலே கைராட்டைக் கொடி தாங்கி; தலையிலே குண்டாந்தடியால் அடி வாங்கி; கொலை செய்யப்பட்ட திருப்பூர் குமரனின் திருவுருவம் எப்படிப்பட்டது என்று தெரியாது இந்தத் தலைமுறை சிறுவர்களுக்கு! ஆனால் உனக்கும், எனக்கும் இந்த ஊரிலே சிலை! அதை அனுதினமும் கண்காணித்துப் பாதுகாப்பதற்கு ஆட்கள்! இதைவிட வெட்கங்கெட்ட நிகழ்ச்சி உன் ஆட்சிக் காலத்தில் வேறு ஏதாவது நிகழ்ந்திருக்கிறதா, விக்டோரியா?"—என்று ராணியாரை நோக்கிச் சிலை வடிவிலிருக்கும் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார் கேட்பார்!

அதற்கு மகாராணியார், "என்ன சக்கரவர்த்தியாரே, இப்படிக் கேட்டுவிட்டீர்! என் ஆட்சியை என்ன இதுபோன்ற போலிகளின்—நடிப்புச் சுதேசிகளின் ஆட்சி என்றா நினைத்து விட்டீர்? நான் ஒரு பெண்ணாக இருந்தாலும் ஒரு நாட்டுத் தலைவருக்கு இருக்க வேண்டிய ஆண்மையோடு அரசாண்டேன். இந்த ஆண்மையற்றவர்களது துரைத்தனத்தை என்னுடைய துரைத்தனத்தோடு ஒப்பிடுகிறீரே; வெட்கம்! வெட்கம்! இதை உடனே திரும்பப் பெற்றுக் கொள்ளும்!"—இப்படி வெடுக்கென்று பதில் சொல்லியிருப்பார், விக்டோரியா மகாராணியார்!

—இப்போது சென்னையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சிலைகளுக்கு மட்டும் பேசும் சக்தியிருந்தால் இப்படியும், இதைவிட இன்னும் கீழ்த்தரமான முறையிலும்தான் கொடியிலே அசோகச் சக்கரம் பொறித்துக் கொண்டு கொள்கை யளவிலே கோழைகளாய் வாழும் காங்கிரஸ் சீடர்களைப் பற்றி இழித்தும், பழித்தும், கை கொட்டியும், வாய் விட்டுச் சிரித்தும் எள்ளி நகையாடி யிருப்பார்கள்!

வெள்ளி 16—8—57 சென்னை

அனல் கொட்டும் அறிக்கை!

இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் மத்திய அரசாங்கத்தில் வேலை கொடுக்க வேண்டும்.

முன்பே அந்த வேலைகளில் இருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தி கற்காவிட்டால் அவர்களுக்குத் தண்டனை தர வேண்டும்.

உயர்நீதி மன்றங்கள்; சுப்ரீம் கோர்ட் — போன்றவைகள் வழங்கும் தீர்ப்புகளை இந்தியில் வெளியிட வேண்டும்.

அரசாங்க அலுவல்களில் மாத்திரமின்றி தனியார் வாழ்க்கையிலும் ஆங்கிலத்திற்குப் பதில் இந்திய மொழியைப் புகுத்த வேண்டும்.

ரயில்வே, தபால் தந்தி, வருமான வரி முதலிய இலாக்காக்களில் இந்தி, பிரதேச மொழி இரண்டிலும் விவகாரங்கள் நடக்க வேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் உத்தியோகங்களுக்கான தேர்வுகள் இந்தி மொழியிலேயே நடைபெற வேண்டும்.

செகண்டரி கல்வித் திட்டத்தில் இந்தியைக் கட்டாய மொழியாக்க வேண்டும்.

—என்பன போன்ற கூரிய நகங்களை நீட்டிக் கொண்டு இந்தி என்னும் கோரப் புலிதனை இதர மொழிப் பிராந்தியங்களின்மீது ஏவிவிடும் விதத்திலே அரசாங்கத்தின் மொழிக் கமிஷன் தனது அறிக்கையினை வெளியிட்டிருக்கிறது.

“இந்தியை யார்மீதும் வலுக்கட்டாயமாகத் திணிக்கமாட்டோம்” —என்ற பிரதமரும்; குடியரசுத் தலைவரும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் சங்கநாதம் செய்து காட்டியதெல்லாம் வெறும் வேஷம் என்பதை விளக்குகிற வகையிலே ‘கேர் கமிஷன்’ அறிக்கை இந்தி தெரியாத இதர மொழிக்காரர்களின் தலையிலே நெருப்பை அள்ளிக் கொட்டுகிறது!

—இந்த அறிக்கையிலே காணப்படும் இந்தித் திணிப்பிற்கான தீவிரம் முழுதும் ஒரே ஒரு மூலகாரணத்தைக் கொண்டுதான் சுழலுகிறது. அதாவது 1965-ம் ஆண்டிற்குள் இந்த உபகண்டத்திலே ஆங்கிலத்திற்கு இருக்கும் இடத்தை இந்தி கைப்பற்றிவிட வேண்டும்—என்கிற நோக்கத்தால் உந்தப்பட்ட விளைவுதான் இந்த அநியாயமான அறிக்கை!

—இந்த அறிக்கையை அதன் மூலத்திலேயே டாக்டர் சுப்பராயனும்; டாக்டர் சுனிதிகுமார் சட்டர்ஜியும் எதிர்த்திருக்கிறார்கள்!

ஆனால் அறிக்கையை நாம் கண்டிப்பதற்கும், இவர்கள் கண்டிப்பதற்கும் நிறைய முரண்பாடுகள் இருக்கின்றன.

‘இந்திக்கு ஆட்சி பீடம் ஏறும் அருகதை இல்லை. அந்தத் திட்டத்தை மூட்டைக் கட்டி அப்படியே ஒதுக்கிவையுங்கள்!’ —என்கிறோம், நாம்!

ஆனால் அவர்களோ, ‘ஒதுக்கிவைக்க வேண்டாம் நண்பர்களே! இன்னும் சில ஆண்டுகளுக்கு ஒத்திவைப்போம். படிப்படியாக இந்தியை அரியாசனமேற்றுவோம்!’—என்று கருதுகிறார்கள்!

—இதே அடிப்படையில்தான் இந்த அறிக்கையை ‘இந்து’—‘மித்திரன்’ போன்ற தேசிய ஏடுகளும் கண்டித்திருக்கின்றன.

ஆங்கிலத்தை அவசர அவசரமாக அப்புறப்படுத்த வேண்டுமென்று விரும்புகிற கேர் கமிஷன் அறிக்கை அந்த ஆங்கில மொழியின் அருமை பெருமைகள் பற்றியும் உணராமலில்லை.

“இந்திய யூனியனிலுள்ள எல்லா காரியங்களுக்கும் நிர்வாகப் பொது மொழியாக இருப்பது ஆங்கிலம்தான்; எல்லா மாநிலங்களின் சட்ட சபைக்கும், பாராளு மன்றத்திற்கும், இந்த நாட்டிலுள்ள எல்லா நீதி மன்றங்களின் நீதி பரிபாலனத்திற்கும் அதுவே பொது மொழியாகும்; அதுவே (இன்னமும் பரவலாக), இந்த நாட்டின் எல்லாப் பல்கலைக் கழகங்களின் மொழியும் கூட! அது தவிர, எல்லா மொழிப் பிராந்தியங்களைச் சேர்ந்த மக்களுக்கும்; இந்தியாவின் பொது வாழ்வில் சம்பந்தப்பட்ட சகலருக்கும் அதுவே பொதுவான மொழியாகவும் இருக்கிறது. அது உலக மொழிகளில் முன்னணி மொழியாக இருப்பதால் சர்வதேச மாநாடுகளிலும்; கூட்டங்களிலும் கலந்து கொள்கிற இந்தியர்களுக்கும் அதுவே மொழியாகவும் இருந்து வருகிறது.”

—இப்படியெல்லாம் ஆங்கிலத்தைப்பற்றிக் குறிப்பிடுகிற கேர் கமிஷன் அறிக்கை; ஆங்கிலத்திற்கு இருக்கிற இவ்வளவு தகுதிகளில் எள்ளளவாவது தான் வக்காளத்து வாங்குகிற இந்தி மொழிக்கு இருக்கிறதா—என்பதை எண்ணிப் பார்க்க மறந்துவிட்டது.

இப்படி எல்லாச் சிறப்புகளும் ஒருங்கே பெற்றிருக்கிற ஆங்கில மொழியை இந்த நிலைமைக்குக் கொண்டு வருவதற்கே தன்னிச்சைப் படித் தரைத்தனம் நடத்திய வெள்ளையருக்கு இரு நூற்றாண்டுகள் பிடித்திருக்கின்றன! ஆனால் வடநாட்டுக் கொள்ளையரோ ஒரு சிறப்புமில்லாத இந்தி என்னும் மலடிப பெண்ணுக்கு ஒரே இரவுக்குள்ளாக பிள்ளைப் பேறு நடத்திவைக்கும் வீண் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நம்மால் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை!

எப்படியோ ஈளைகட்டி; இருமல் முற்றி; பாடையேறிப் போய் விட்டதாக நாம் நினைத்துக் கொண்டிருந்த இந்தி, பீளை கண்ந்து; மாலை சூட்டி மயானத்திலிருந்து புறப்பட்டிருக்கிறது. அதனால்தான் மறைத்தும் திரித்தும் பேசி; மக்கள் மனதிலே தெளிவற்ற மயக்கத்தை ஊட்டி; எப்படியாவது இந்நாட்டில் இந்தியைத் திணித்துவிட முழு மூச்சுடன் பாடுபட்டு வருகின்றனர், வட நாட்டு மேலிடத்தோர்!

—இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் சென்ற வாரம் குடியரசுத் தலைவர் இராஜேந்திரர் ‘இந்திய மொழிகள் அனைத்திற்கும் ஒரு பொதுவான லிபி ஒன்று வேண்டும்’—என்று பேசியிருக்கிறார். அது தேவ நகரி லிபியாக இருப்பது நல்லது என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்.

அதைத் தொடர்ந்து; எஜமானர் செல்லும் வழியிலேயே சென்று; நிதியமைச்சர் கனம் சுப்ரமணியம் செய்தி நிருபர்களிடம் பேசுகையில், “தேவநாகரி லிபிக்குப் பதிலாக ரோமன் லிபியை (ஆங்கில எழுத்து) உபயோகிப்பதே நலம்,” என்று குறிப்பிட்டுத் தனது விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார்.

—அவர்களுக்குள்ளாக பேசி முடிவு செய்துகொண்டது போலவே இந்திக் கொள்கை குறித்து மறைமுகமாக எல்லாக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன.

ஒரு விதத்திலே இதை நாம் வரவேற்க வேண்டியதுதான்!

வருவதெல்லாம் வரட்டும்! இந்தி வெறியர்கள் இன்னும் தீவிரம் பெறட்டும்! 1965 என்ன; நாளைக்கே அவர்கள் இந்திக்கு மகுடம் புனைவிக்கட்டும்! இதர பிராந்திய மொழிகளை நாசம் செய்யட்டும்! அப்போதுதான் மற்றவர்களது தூங்கி வழியும் சுயமரியாதை உணர்வு கொடி யேந்திப் புறப்படும்! அப்போதுதான் தன்மானம் கரையுடைத்துப் போர் முரசு கொட்டும்!

—இப்படித்தான் இந்தி வெறியர்கள் போட்டி போட்டுக்கொண்டு; எல்லோருக்கும் முன்னதாக உத்திரப் பிரதேசத்திலும், பீகாரிலும் ஆங்கிலத்தை உதைத்துத் தள்ளி இந்தியைத் தங்கள் மாநிலங்களின் ஆட்சி மொழியாக்கினார்கள்!

—அதன் பிறகுதான் மற்ற மாநிலத்துக் காங்கிரஸ் வீரர்களுக்கும் தன்மானம் பிறந்து; தங்கள் (இந்தி அல்லாத) பிராந்திய மொழியை அரசு கட்டிலேற்றினார்கள்!

—அது போலவே இப்போதும் இவர்கள் எந்தவித எதிர்ப்பைப்பற்றியும் கவலைப்படாமல் இந்தியைச் சிம்மாசனம் ஏற்றட்டும்! அப்போதுதான் இதர பிராந்திய மொழிக்காரர்களின் ஏகபோகப் பித்தம் தெளியும்! இந்தி ஏகாதிபத்தியவாதிகளின் கொட்டு உடையும்!

★ மலையாளக் கதை: ★

★ ஊர்வலம் ★

நண்பகல் மணி ஒன்று என்பதை அந்த ஊரின் மத்தியிலிருந்த ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் மணி கணகண வென்ற ஒலியின் மூலம் முழங்கிக் காட்டியது. கிழிந்துபோன பாய்க்குக் கீற்றோலை போட்டு முடைந்து கொண்டிருந்த முத்தம்மா மணியோசை கேட்டதும் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவள் மதி முகத்தைக் கவலை மேகம் கப்பிக் கொண்டிருந்தது. பள்ளிக்குச் சென்ற பிள்ளை நண்பகல் உணவுக்காக ஓடிவரும் காட்சியை, மக்களைப் பெற்ற மகராசிகளெல்லாம் வழிமேல் விழி வைத்துக் காணக் காத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், ஆசைக்கும் அருமைக்கும் ஒரே மகனைப் பெற்ற முத்தம்மா மட்டும் 'மகன் இப்பொழுது வந்துவிடுவானே!' என்ற ஏக்கத்தோடு கவலை தேங்க வீற்றிருக்கக் காரணம் என்ன? தீவிர ஆய்வு நடத்தியோ, திறமையாக விவாதம் புரிந்தோ முடிவுகட்ட வேண்டிய ஒன்றல்ல இது. தெளிவானது வாழ்வுக் கடலிலே மிதந்து கொண்டிருக்கும் அவர்கள் குடும்பக் கப்பல் வறுமைப் புயலால் தாக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்டிருந்தது. அவள் கணவன் செல்லையா வீட்டிற்கு வெளியே கோடரியை ஒரு கல்லிலே தீட்டி கூரேற்றிக் கொண்டிருந்தான்.

"குழந்தை இப்ப வருவானே, அவனுக்குச் சாப்பிட என்ன கொடுக்கிறது?" — முத்தம்மா கேட்டாள். செல்லையா திரும்பி அவளை ஒரு தரம் பார்த்துவிட்டுத் தன் வேலையிலே ஈடுபட்டான். பதில் எதுவும் பேசவில்லை. 'என்ன கொடுக்கிறது?' —அவன் இதயமும் அதே கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருந்தது.

"நீ மனுசன்தானா? குழந்தைக்கு என்ன கொடுக்கிறதுன்னு கேக்கிறேன்; மரமாட்டம் நிக்கிறியே, பதில் பேசாமல்!"

செல்லையா தலையைக் கவிழ்ந்தவாறே கோடரியை வீட்டினுள் கொண்டு வைத்துவிட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியே நடந்தான். சிறிது நேரத்தில் ஓர் இளநீரைக் கொண்டு வந்து முத்தம்மாவின் முன்னால் வைத்தான். வீட்டுக்கு வடபுறத்தில் இருக்கும் தென்னந் தோப்பில் இருந்துதான் அந்த இளநீரைப் பறித்தான். அந்தத் தோப்போ அல்லது அங்கே நின்ற மரங்களோ அவனுக்குரியன அல்ல.

எனினும் வறுமை, பிள்ளை மேலுள்ள பாசம், பெற்றவனின் இதயத்தில் எழுந்த வேதனை, அவனுக்கு உரிமை இல்லாத ஒன்றின்மேல் அவனை உரிமை கொண்டாடத் தூண்டியது. ஆம்; அவன் திருடனானான்! அவன் எதிர் பார்த்த அளவிற்கு அது நல்லதல்ல! இருவருடைய பார்வைகளும் மோதிப் பிரிந்தன. அந்தப் பார்வையிலே காதல் பொறி பறக்கவில்லை. சோகச்சுடர் தான் கொழுந்துவிட்டெரிந்தது.

செல்லையா அந்த வட்டாரத்திலேயே மரம் வெட்டுவதில் பெரிய நிபுணன். எவ்வளவு கேடான இடத்தில் வசதியற்ற வகையில் நெளிந்து வளைந்து மரம் நின்றாலும் குறி தவறாமல் அதை வெட்டி வீழ்த்துகின்ற திறமை அவனுக்கே உரியது. ஆனாலும் என்ன; வேலையில்லா திண்டாட்டம் அவனையும் விடவில்லை. அன்றாடம் உழைத்து கிடைக்கின்ற காசைக் கொண்டு உணவு சமைத்து உண்கின்ற அவன் வாழ்க்கை வேலை இல்லாத காரணத்தினால் வேதனையின் வளர் நிலமாயிற்று. வறுமையையோ பசிக்கொடுமையையோ தாங்கிக் கொள்ளுகின்ற மனத் துணிவு அவனுக்கு இருந்தது. அவன் மனைவி முத்தம்மாவும் பஞ்ச காலத்தில் உண்ணாமல் உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கும் கலையைப் பக்குவமாக உணர்ந்திருந்தாள். ஆனால் அவர்கள் அன்புச் செல்வம், இன்பக் களஞ்சியம், ஒரே மகன் கண்ணன் பசியைத் தாங்கும் அளவிற்கு பரிபக்குவமடையவில்லை. 'இன்று சாப்பிட ஏதும் இல்லையடா மகனே' என்று அவர்கள் சொல்ல, 'அம்மா, கஞ்சித் தண்ணி கூடவா இல்லை' என்று கேட்டு அவன் கதறிக் கண்ணீர் வடிக்க, அக்காட்சியைக் கற்பனை செய்து பார்ப்பதுகூட அவர்களுக்கு வேதனைபுரியில், சோகவீட்டில் குடியேறித் துயரக் கட்டிலில் புரளுவதுபோல் இருந்தது.

கண்ணன் இரண்டாவது வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் சின்னஞ்சிறு பையன். பாடசாலை மணியடித்து விட்டது. 'அம்மா' என்றழைத்தவாறு 'யாரைத் தூக்கி விழுங்குவோம்' என்ற வேகத்தில் ஓடிவருவான் உணவை நாடி. அவனுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்ற ஆராய்ச்சியில் வெட்கமும் துக்கமும் தாக்க அவர்கள் மனம் ஈடுபட்டிருந்தது. பள்ளியில் படிக்கின்ற பிள்ளைகளெல்லாம் வயிறார உண்வருந்திவிட்டு வரும்பொழுது, கண்ணன் மட்டும் பசியால் தாக்கப்பட்டு வருவது என்பதை எண்ணிப் பார்ப்பதே அவர்களுக்குக் கடினமாகத்தான் இருந்தது. முந்திய நாள் இரவு கணவன் அரிசியோடு வருவான் என்ற எண்ணத்தில் முத்தம்மா அடுப்பினுள் தூங்கிக் கொண்டிருந்த பூனையை விரட்டிவிட்டு, தீமூட்டி உலை வைத்தாள். செல்லையா வந்தான்; ஆனால் அரிசி வரவில்லை. அடுப்பில் காய்ந்துகொண்டிருந்த உலை நீரைக் குடித்து பசியைத் தணித்துக் கொண்டார்கள். இன்றோ தீயே மூட்டவில்லை. கீழே விழுகின்ற தென்னை ஓலைகளை எடுத்து முடைந்து கீற்றோலையாக்கி விற்று வந்தாள் முத்தம்மா. இப்பொழுது அந்த வேலையும் இல்லை. இந்தச் சூழ்நிலைதான் செல்லையாவை அவனுக்குச் சொந்தமில்லாத இளநீரின்மேல் சொந்தம் கொண்டாடச் செய்தது.



★

தூரத்தில் வரும்பொழுதே "அம்மா, எனக்கு ரெண்டணா" என்று கத்திக்கொண்டு ஓடி வந்த கண்ணன், கையை நீட்டிக் கொண்டு எதிரே வந்து நின்றான்.

"ரெண்டணாவா? ...... எதுக்கு?" — ஆச்சரியத்தோடு கேட்டாள் முத்தம்மா.

"எங்கள் பள்ளிக்கூடத்திலே வித்தை காட்டுறாங்க, நான் பார்க்கணும். தா, ரெண்டணா தா..."—கண்ணன் விடவில்லை. அவனுக்கு உண்ணும் உணவைவிட இரண்டணாதான் பெரிசாகத் தோன்றியது. அந்த இரண்டணா இருந்திருந்தால் முத்தம்மா ஒரு ஆழாக்கு பொடியரிசியாவது வாங்கி அவனுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்திருப்பாள். கடன் கொடுத்துக் கடன் கொடுத்து அலுத்துப் போன அடுத்த வீட்டுக்காரர்களும் 'கடன் இல்லை' என்று பலகை தொங்கவிடவில்லையே தவிர, நேராகவே சொல்லிவிட்டார்கள். ஒட்டிய வயிறோடு திரும்பி வரும் மகனுக்கு உண்ண எதைத் தருவது என்ற ஆராய்ச்சியில் இறங்கிவிட்டிருந்த பெற்றோர்களிடம் 'இரண்டணா கொடு' என்று மல்லுக்கு நிற்கிறான் மகன்,

"கொடும்மா, இரண்டணா!"- கண்ணன் விடுவதாக இல்லை.

"கண்ணா, நீ இப்படி உயிரை வாங்கினால்," அவன் தலை மயிரைக் கோதிக்கொண்டே பேசினாள்: "கண்ணே, வித்தையெல்லாம் நமக்கல்லடா!"

"வேறு யாருக்காம்?"–அந்த இளம் உள்ளத்திலே பதுங்கிக் கிடந்த உரிமை உணர்ச்சி தலை நீட்டியது.

"பணமுள்ளவர்களுக்கு; நம்மைப் போல பராரிகளுக்கில்லை. அப்பாவுக்கு வேலை கிடைச்சு எத்தனை நாளாச்சு தெரியுமா?" —பெற்றவள் பேசினாள்.

"வேலை ஏன் கிடைக்கலை? நான் அதுக்கு என்ன செய்யணும்?"—ஆராய்ச்சி, அதைத் தொடர்ந்து புரட்சி வார்த்தை உருவெடுத்து வெளி வந்தன. அந்தச் சொற்கள் பெற்றோர்களின் இதயத்தில் தீக் குழம்பை வாரிக் கொட்டின.

"கண்ணா! இந்த வித்தை வேணாம். நல்ல வித்தை வரட்டும்; பார்க்கலாம். உனக்குத் தரையில் ஓடுற மோட்டாரும், புதுச் சொக்காயும் வாங்கித் தறேன்!"-தன் கனவுக்கு உருக்கொடுத்து அந்தப் பிஞ்சு உள்ளத்தை நனவு என்று நம்பச் செய்து தன் கையாலாகாத்தனத்தை மறைத்துக்கொண்டாள் முத்தம்மா.

"உம், எனக்கு எல்லாம் தெரியும். சும்மா சொல்றே!"—அந்த இளம் உள்ளம் ஏமாறவில்லை என்பதற்கு அத்தாட்சி.

"இல்லே கண்ணு; நிச்சயமா தறேன். என் செல்வம் இல்லையா நீ; உன்னை ஏமாற்றுவேனா?"–தாயுள்ளம் தான் கூறிய ஆசை மொழிகளுக்கு அன்பு மூலாம் பூசியது.

"சரி, எனக்குப் பசிக்குது; சோறுபோடு."

இந்த வார்த்தைகள் ஆயிரம் சம்மட்டிகளால் அடிப்பது போலிருந்தது அவர்களுக்கு. முத்தம்மா செல்லையாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். வெட்டி வைத்திருந்த இளநீரைத் தன் மகனிடம் நீட்டினான் செல்லையா.

"இது வேணாம்; சோறுதான் வேணும்!"—மகனின் வேண்டுகோள் இது. கண்ணனையே பார்த்துக் கொண்டிருந்த செல்லையா கண்களை கீழே தாழ்த்தினான். தேங்கி நின்ற கண்ணீர் கன்னங்களிலே புரண்டது.

"கண்ணு! இன்னிக்கு சமைக்கவில்லையடா! நாளை..." –சோகம் கப்பிக்கொண்டிருந்த இதயத்திலிருந்து சொற்கள் தயங்கித் தயங்கி வந்தன.

'ஏன் சமைக்கலையாம்? எப்ப பார்த்தாலும் உனக்கு இந்த

※ 9-ம் பக்கம் பார்க்க

கரு:
பொன்குன்னம் வர்க்கி

உரு:
நாஞ்சில் அன்பெழில்

ஊர்வலம்...

※ 4-ம் பக்கத் தொடர்ச்சி

பேச்சுத்தான்! காலம்பரச் சொன்னேன் மத்தியானம் சோறு போடறேன்னு! இப்போ நாளைக்குங்கிறே......"—அவன் விழிகளில் கண்ணீர் ததும்பி வழிந்தது.

"என் செல்வமில்லையா நீ? உன்னை ஏமாற்றுவேனு? சமைப்பதற்கு ஏதேனும் வழியிருந்தால் சோருக இல்லாவிட்டாலும் கஞ்சியாகவாவது ஊற்ற மாட்டேனு?" என்று சொல்லிக்கொண்டே நடு நடுங்கும் கைகளால் வெட்டி வைத்திருந்த இளநீரை எடுத்து அவனிடம் நீட்டினுள்.

★

கண்ணனுக்கு இரவிலாவது சோறு தர வேண்டும் என்ற எண்ணத்தை மனதில்கொண்டு கோடரியை எடுத்துக்கொண்டு வெளியே சென்ற செல்லையா, பொழுது சாய்ந்து விளக்கேற்றிய பிறகு வீசிய கையும் வெறுங் கையுமாக வீடு திரும்பினுன். பசியால் வாடி தூக்கத்தின் அரவணைப்பில் தன்னை மறந்து கிடந்த கண்ணனைக் கண்டான். கல்லாய்ச் சமைந்து நின்ருன். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வெளியேறினுன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு பழைய சட்டியில் சோற்ருேடு உள்ளே நுழைந்தான். மானத்தோடு வாழ நினைத்தான். அந்த மானத்திற்கு மதிப்பளிக்கவில்லை உலகு. ஈனத்தனமான திருட்டுத் தொழிலுக்கு அடித்துத் துரத்தப்பட்டான். யார்வீட்டுப் புறக்கடையிலேயோ தேய்ப்பதற்கு வைத்திருந்த சட்டி அவனுக்குத் திருடன் என்ற பட்டத்தைக் கட்டிவிட்டது. அந்தச் சட்டியையும், கணவனின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள் முத்தம்மா. அவமானம் தாங்காமல் அவள் தலை தானே கவிழ்ந்தது.

"இந்தா, இந்தச் சோற்றை கண்ணனுக்குக் கொடு!"

ஆழங்காண முடியாத பெண்ணுள்ளத்தின் அடித் தளத்திலே பதுங்கிக் கிடந்த சினம் வெடித்தெழுந்தது. "முடியாது! என் செல்வம் பட்டினியாகக் கிடந்து செத்தாலும் சாகட்டும்! இந்தத் திருட்டுச் சோறு அவனுக்கு வேண்டாம்! வெட்கமில்லையா உங்களுக்கு? நீங்களும் ஒரு ஆண்பிள்ளைதானு?" —முத்தம்மா கோபத்தில் வார்த்தைகளுக்குப் பொருள் உணர்ந்தோ உணராமலோ பேசிக் கொண்டே போனுள். செல்லையா எதையும் சட்டைசெய்யவில்லை பக்கத்துத் தோட்டத்திலிருந்து இரண்டு மிளகாயைத் திருகி வந்து, இரண்டு உப்புக் கல்லையும் பிசைந்து கண்ணனை எழுப்பி சோற்றைக் கொடுத்தான். சின்னஞ்சிறு கண்ணனின் ஒட்டிய [illegible]றும், செல்லையாவின் ஏங்கிய இதயமும் ஒருங்கே நிறைந்தன.

★

அன்றும் வேலை கிடைக்காததால் கோடரியைத் தீட்டிக்கொண்டு வீட்டிலிருந்தான் செல்லையா. கண்ணனை எண்ணெய் தேய்த்து நீராட்ட, மருத்துவன் கொடுத்த எண்ணெயையும், காய்ந்த வெந்நீரையும் எடுத்து வைத்துக்கொண்டு மகனின் வரவு நோக்கிக் காவலிருந்தாள் முத்தம்மா. பள்ளிக்கூடம் விடும் நேரம் கடந்துவிட்டது. கண்ணனைத்தான் இன்னும் காணவில்லை.

சுதந்திர விழாவை ஒட்டி கண்ணனின் பள்ளிக்கூடத்தில் பலவித ஏற்பாடுகள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன. நாலைந்து விளையாட்டுப் போட்டிகளில் கண்ணனும் கலந்து கொள்கிருன். அவன் உயிர் நண்பன் பாலு உடம்புக்கு முடியாததால் சில நாட்கள் பள்ளிக்கு வரவில்லை. விளையாட்டுகளில் எல்லாம் இவனுக்கு இணை நிற்கும் பாலு வராததால் கண்ணனுக்கும் உற்சாகமில்லை.

பாலுவின் உடல் நிலை பற்றி அறிய பாலுவின் பங்களாவிற்குச் சென்றிருந்தான் கண்ணன். அந்த ஊர் பண்ணையாரின் மகனுன பாலுவுக்குப் பிடித்தமான இரண்டு மூன்று நெல்லிக் காய்களும் அவன் பைக்குள்ளே பதுங்கிக் கிடந்தன. பழக்கமானவேலைக்காரக்கிழவரின் உதவியால் உள்ளே நுழைந்த கண்ணன் படுக்கையில் பாலுவைப் பார்த்ததும் திடுக்கிட்டான். "பாலு" —தேனெழுக அழைத்த கண்ணன். "பள்ளிக்கூடத்திலே போட்டியெல்லாம் நடக்குது; நீ எப்போ வருவே?" என்று பையினுள் பதுங்கிக் கிடந்த நெல்லிக் காயைக் காட்டியவாறு கேட்டான்.

அதற்குள் அங்கே வந்த நர்சு, அழுக்குப் படிந்த பையன் பாலுவின் அருகில் இருப்பதைப் பார்த்ததும் கோபம் கொண்டாள். 'யார் இவன்? எழுந்திருடா!" என்று அவனை அதட்டினுள்.

கண்ணன் அழுதுகொண்டே வீடு திரும்பினுன்.

★

துணிமணிகள் அழுக்கானுலும், தொழுநோயால் வாடினுலும், அவனை வரவேற்கும் நான்கு விழிகள் அவன் வரும் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தன.

"ஏண்டா கண்ணு இவ்வளவு நாழி?"—அன்பு குழையக் கேட்டான் செல்லையா

"அப்பா! எனக்கு புது சட்டை நிஜாரெல்லாம் எங்கே?"—கண்ணன் சுதந்திர விழாவில் எல்லோரும் புதுச் சட்டை அணிந்துவருவார்கள். எனவே தானும் தன் நிலையை சரி செய்துகொள்ள முயன்ருன்.

"தரேன் அப்பா. நிச்சயமாய் உனக்கு தச்சுத் தரேன்!"—செல்லையா ஆணையிட்டுக் கொடுத்தான்.

★

மறு நாள் பொழுது புலர்ந்தது. தாளமுடியாத காய்ச்சலால் தினறினுன் கண்ணன். கை மருத்துவம், மாந்திரீகம், சித்த வைத்தியம், நாட்டு வைத்தியம் அத்தனையும் பார்த்தாயிற்று. பயனில்லை. கடைசியாக டாக்டரிடம் ஓடினுன் செல்லையா. நச்சுக் காய்ச்சலுக்காளானகண்ணன் மிகஆபத்தான நிலையில் இருக்கிருன் என்பதை மட்டும் அவர் உணரத் தவறவில்லை. இருப்பதிலேயே மலிவான மாத்திரை ஒன்றின் பெயரை எழுதிக் கொடுத்தார். அதன் விலையே பத்து ரூபாய்! ஒரு நேர உணவுக்கு வழியின்றி அலையும் அவன் பத்து ரூபாய்க்கு எங்கே போவது?

விழியிலே நீர் வழிய படுக்கையருகில் உட்கார்ந்து காய்ச்சலால் துடிக்கும் தங்கள் செல்வத் திருமகனை, சிங்காரக் கண்ணனை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள் பெற்றேர்கள். கண்ணனின் கருவிழிகள் சுழன்றன. "என் செல்வமே, எங்கள் வாயில் மண்ணைப் போடாதேடா அப்பா!" என்று முத்தம்மா கதறினுள். ஆயிரம் ஈட்டிகளால் தாக்கப்பட்டது போல் துடிதுடித்த செல்லையா தன் ஒரே நம்பிக்கை ஒளியான டாக்டரைத் தேடி ஓடினுன்.

"ஐயா, கண்ணனுக்கு அதிகமாயிருக்கிறது"—சோகம் [illegible]பிய தொண்டையை உடைத்துக்கொண்டு வார்த்தைகள் வெளிவந்தன.

"நான் எழுதித் தந்த மாத்திரையைக் கொடுக்கிருயா?" என்ருர் டாக்டர்.

"இல்லையே ஐயா......! என் கோடரியைக்கூட அடகு வைத்தேன். அப்படியிருந்தும் பணம் தேறவில்லையே சாமி!"—கதறினுன் செல்லையா.

"அதற்கு டாக்டர் என்ன செய்யமுடியும்?" என்று முடிவுரை கூறிவிட்டு எழுந்து சென்ருர் டாக்டர்.

★

சுதந்திர விழா அந்த கிராமத்தையே அமர்க்களப்படுத்திக்கொண்டிருந்தது! தோரணங்களும், வளைவுகளும் வீதிகளை அலங்கரித்தன! வாழத் தெரிந்தவர்கள் எல்லாம் விதவிதமான பட்டு அணிகளிலே தங்கள் உடல்களை மறைத்துக்கொண்டு பவனி வந்தனர். ஊருக்கு அருகில் இருந்த ஏரித்திடலில் பெரிய கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. யார் யாரோ பெரிய தலைவர்கள் எல்லாம் பேசப்போகிருர்கள். அங்கே பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கி,

"எங்கும் சுதந்திரம் என்பதே [பேச்சு—நாம்
எல்லோரும் சமம் [என்ப துறுதியாச்சு"

என்ற பாரதியார் பாடலை முழங்கிக்கொண்டிருந்தது.

அப்பொழுது மணி மூன்று! பள்ளிக்கூடத்திலிருந்து புத்தம் புது ஆடைகளோடு, மூவர்ணக் கொடிகள் ஏந்தி இந்நாட்டின் எதிர்கால சிற்பிகள், சின்னஞ்சிறு வண்ணக்கிளிகள், மாணவ அணிவகுப்பு வந்துகொண்டிருந்தது! புத்தாடை அணிந்துகொண்டு நர்சு வேலையாள் புடைசூழ வாசலில் நின்றுகொண்டிருந்த பாலுவைக் கடந்து ஆரவாரம் மிக்க அந்த ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது! அந்த ஊர்வலத்தில் பாலு ஆவலோடு தேடிய கண்ணன் இல்லை!

அது போன சற்று நேரத்துக்கெல்லாம் அந்த ஊர்வலத்தைத் தொடர்ந்தே வேப்பிலையால் மூடிய பிணம் ஒன்றை சுமந்து இரண்டு மூன்று பேர் போய்க்கொண்டிருந்தனர். அந்தப் 'பாடை'யில் 'நீங்கா நின்' துயிலில் ஆழ்ந்திருந்த கண்ணன் தன் தோழர்களைத் தொடர்ந்தே போய்க்கொண்டிருந்தான்! ★

ஆள்பவரும் ஆளப்போகிறவரும்!

★

காமராசும், தி. மு. க. தலைவர் சி. என். அண்ணுதுரையும் விரும்புகிற எல்லாகாரியங்களையும் பிரதம மந்திரி நேருவின் காலத்திற்குள்ளேயே நிறைவேற்றிவிடவேண்டும்-என்கிற நம்பிக்கையை பங்கிட்டுக்கொள்வது போல் தெரிகிறது.

சென்ற வாரம் நடைபெற்ற சென்னைப் பொதுக் கூட்டத்தில் காமராஜ் 'பிரதம மந்திரி நேருவின் காலத்திற்குள்ளேயே சோஷலிசத்தை நிறுவவேண்டும்' - என்கிற கோஷத்தைப் புனைந்திருக்கிருர்.

சமீபத்தில் அண்ணுதுரை "நாம் நேருவின் காலத்திற்குள்ளாகவே திராவிட நாட்டை ஸ்தாபிக்கவேண்டு"மென்று அறிவித்திருக்கிருர்.

—'கரண்ட்' (7—8—57)
(பம்பாய் ஆங்கில ஏடு)

★ ஏ, தெளிவின்மையே! ★
உன் பெயர்தான் பண்டித நேரு!

இன்று இந்திய உபகண்டமெங்கும் சுதந்தர விழா முன்பு எப்போதும் நடைபெற்றதைவிடச் சிறப்பாக நடைபெறுகிறது. முன்பைவிட இப்போது ஒரு நாள் அதிகமாகவும் அரசாங்கம் விடுமுறை அளித்திருக்கிறது!

—அந்த ஒரு நாளைத்தான் விடுதலைப் போராட்டத்தின் நூற்றாண்டு விழா என்கிறார்கள்!

ஆனால் உண்மையில் அவர்கள் குறிப்பிடுகிற விடுதலைப் போராட்டத்தின் நூற்றாண்டு விழா ஆகஸ்ட் 16-ந் தேதி வரவில்லை! முழுமனதோடு இந்த நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதற்கு விரும்பியிருந்தால், அவர்கள் அதை சென்ற மே மாதம், 10-ம் தேதியே கொண்டாடியிருக்க வேண்டும்!

ஆனால் 10-ந் தேதி நூற்றாண்டு நினைவு நாள் நடைபெற்றது; ஏனோ அப்போது இன்றைக்கிருக்கிற சிறப்பு எதுவுமே இல்லை!

இன்னும் சொல்லப்போனால் சென்ற மே மாதம், 10-ந் தேதி நடைபெற்ற எந்த நூற்றாண்டு விழா வைபவங்களிலும்—இந்தியாவின் எந்த மாநிலத்திலும்—எந்தக் காங்கிரஸ் அமைச்சர்களும் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை!

ஏன்?

அவர்களுக்குள்ளாகவே ஒரு பெருங் குழப்பம்—கொள்கைக் குழப்பம்! 1857-ம் ஆண்டு நடைபெற்றது உண்மையிலேயே கிழக்கிந்தியக் கம்பெனியில் வேலை பார்த்து வந்த சிப்பாய்கள் நடத்திய வெறும் கலகமா; அல்லது விடுதலை வேகம் கொண்டு வெள்ளையரை ஒரேயடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்கிற உயர் எண்ணத்தினால் எழுந்த விடுதலைப் புரட்சியா—என்பது பற்றி காங்கிரஸ் தலைவர்களிடையேகூட முழு மனதான ஒற்றுமை இல்லையாம்!

முதலாவதாக பண்டித நேரு, சர்தார் பணிக்கர் போன்றவர்கள் அழுத்தந் திருத்தமாக 1857-ல் நடைபெற்ற—இதுவரை சிப்பாய் கலகம் என்று கேலிப் பெயரைச் சூடிக் கொண்டிருக்கிற அந்த நிகழ்ச்சியைத்தான் முதல் சுதந்தரப் போர்—என்று கூறவில்லை.

பண்டித நேரு அந்தக் கலகத்தை—இல்லை; இல்லை; அந்த விடுதலைப் போராட்டத்தை 'நிலப் பிரபுத்துவ இந்தியாவின் கடைசிச் சுடர்'—என்றே வர்ணிக்கிறார்.

அது மட்டுமா? சிறைச்சாலையிலிருந்துகொண்டே அவர் எழுதிய "இந்தியாவின் கண்டுபிடிப்பு" என்னும் புத்தகத்தில் அவர் கீழ்க் கண்டவாறும் எழுதியிருக்கிறார்;

"முக்கியமாக அது (சிப்பாய்க் கலகம்) பரவலாக இருந்த அன்னியர் எதிர்ப்பு உணர்ச்சியை உதவியாகக் கொண்டு, நிலப் பிரபுத்துவத் தலைவர்களையும். அவர்களைப் பின்பற்றுவோர்களையும் தலைவர்களாகக் கொண்ட ஒரு நிலப் பிரபுத்துவ எழுச்சியாகும்! அப்படி இருப்பதனால்தான் அது சோர்ந்துபோன; பழைய; பலமிழந்த; இன்னமும் டெல்லி அரண்மனையில் அமர்ந்திருக்கிற மொகலாயப் பரம்பரையை எதிர்பார்த்திருந்தது."

★

"தலைவர்களிடையே (சிப்பாய் கலகத்தின்) எந்தவித தேசிய அல்லது ஒற்றுமைப்படுத்தும் உணர்ச்சிகளோ எதுவுமில்லை! தங்களது நிலப் பிரபுத்துவ பிரத்யேக உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதோடு சேர்ந்த அன்னிய எதிர்ப்பு உணர்ச்சி—இவைகள் தேசிய ஒற்றுமைப் படுத்தும் உணர்ச்சிக்கு ஈடு செய்வதாக இல்லை!"

—இவ்விதம் எழுதி வைத்திருக்கிறார், பண்டிதர். அதனால் தான் மே திங்களில்வந்துபோன நூற்றாண்டு நாளிலே அவருக்கும், அவர் உத்தரவுப்படி நடக்கின்ற மாநில காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் உற்சாகம் இல்லை!

ஏன் பண்டிதர் இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார்? விடுதலை அவருக்கு மிகவும் பிடித்தமான பொருள்; இருந்தும் அவர் இந்தப் புரட்சிக்கு ஏன் சரியான மதிப்பு போடவில்லை?

ஏனெனில் அவர் படித்தது வெள்ளைக்காரர்கள் எழுதி வைத்த சரித்திரம்! அதனால் தான் அவர் அவ்வாறு எழுதி வைத்திருக்கிறார்!

—இதைத் தவிர இதற்கு வேறு என்ன விளக்கம் தர முடியும்!

முன்னுக்குப்பின் முரண்—குழப்பம்—

—இப்போது பண்டிதருடைய கொள்கையை சூழ்ந்திருக்கின்றன இதே பண்பாடுகள்!

"ஏ, பலவீனமே! உன் பெயர்தான் பெண் என்பது!"—என்று குறிப்பிட்டார் ஷேக்ஸ்பியர்!

அதுபோலவே; "ஏ, தெளிவின்மையே! உன் பெயர்தான் பண்டித நேரு!"—இப்படித்தான் நாமும் குறிப்பிட வேண்டியிருக்கிறது! ஃ

பிறைவானம் . . .

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

அதைப் பார்த்துக் கொண்டிருந்த தேவன் தன்னையும் மீறி "ஐயோ" என்று கத்திவிட்டான்.

அதே சமயம் வேகமாக இழுக்கப்பட்டு கரையில் விழுந்த மீன் துள்ளியது. மீன் பிடிப்பவன் இரு கை விரித்து அதைப் பிடிக்கத் தாவினான்; ஆனால் எம்பிக் குதித்த மீன் தாவித் தடுமாறி குளத்துக்குள்ளேயே விழுந்து விட்டது.

குழப்பம் அடைந்திருந்த நெஞ்சம் சிறிது சாந்தியடைய தேவன் வீட்டை நோக்கி நடையைக் கட்டினான்.

★

தேவன் வீட்டினுள் நுழைந்த போது அவன் சற்றும் எதிர்பார்த்திராத காட்சி ஒன்றைக் கண்டான். அவன் தந்தை நின்று கொண்டிருந்தார், கை நிறையப் பணத்துடன்! அதைவிட ஆச்சரியம்—முகத்திலே புன்சிரிப்புடன்!

"தேவா! இதோ பார்த்தாயா, எவ்வளவு பணம்? இன்று சீட்டாத்திலே இவ்வளவையும் ஜெயித்து விட்டேனடா!"-மகிழ்ச்சிப் பெருக்கோடு—கை நிறையப் பணத்தைக் கண்டுவிட்ட களிப்போடு கத்தினர் அப்பா!

அவர் எதிர்பார்த்தார், பணத்தைக் கண்டு பல்லிளித்து ஓடிவருவான் தன் பாலகன் என்று! ஆனால் தேவன்...அந்தப் பணக்கத்தைகளை—பாழான வழியிலே கிடைத்த பொருளை ஏறிட்டும் பார்க்கவில்லை! "தொடாதே! தொடாதே! அது விஷம்! பார்க்கப் பார்க்க வெறியூட்டி விழி மறைக்கும் ஆலகால விஷம்!" என்று அவன் உள்ளத்தின் அடித்தளத்திலே யிருந்து நீதியும் நேர்மையும், கடமையும் கண்ணியமும் கண்டனக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறதே!

ஆனால் அப்பாவோ அதைப்பெட்டியிலிட்டுப் பூட்டி பெருமிதத்தோடு நடை போட்டார்!

தேவன் ஆகாய வெளியை நோக்கினான்! அவன் தந்தை தகாத வழியிலிருந்து நேரான பாதையடைய அந்தச் சூன்யமான வான வெளியிலேயாவது வழி கிடைக்காதா என்று அவன் நீர் நிறைந்த விழிகள் வலை போட்டுத் தேடுகின்றனவோ?

★

மறுநாள் — குளக்கரை மேட்டிலே நின்றும் நின்று கொண்டிருந்தான் தேவன். மீன் பிடிப்பவன் தான் இப்போதெல்லாம் அவனது பொழுதைப் போக்குபவனாக இருக்கிறானே!

நன்றாக இருட்டிக் கொண்டு வந்தது.

"என்னய்யா! இருட்டில் கூடவா மீன் கிடைக்கும்?"—தேவன் தான் கேட்டான், சந்தேகத்தோடு!

"இருட்டினால் என்ன? இப்படியே பொழுதேதான் விடிந்துவிட்டால் என்ன? நேற்று என்னை ஏமாற்றிவிட்டுப் போன 'எத்தனை' விட்டுவிடுவேனா? ஏமாளி மீன்—எங்கே போகும்? இன்றும் பருக்கைக் கிடைக்காதா என்று வட்டமிட்டுக் கொண்டுதானே இருக்கும்!"—என்று சொல்லிக் கொண்டே போன மீன் பிடிப்பவன், "ஆ!...இதோ!..." என்று கத்திக் கொண்டு தூண்டிலைச் கண்டி இழுத்து, 'குபீர்' என்று எழுந்தான்.

அந்தோ, பரிதாபம்! தூண்டியின் இரும்பு முள்ளில் இன்று வகையாக மாட்டிக் கொண்ட அந்த மீன் கண நேரத்தில் அவனது இரும்புப் பிடிகளில் சிக்கி விட்டது! வாயிலும் செதிள்களிலும் இரத்தம் கசிய உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அந்த மீனைக் கண்டதும் தேவன் "ஐயையோ!" என்று இன்றும் அலறிவிட்டான்!

அந்தச் சோகப் புலம்பல் மீண்டும் தொடரும் என்று அவன் அப்போது உணரவில்லை. அவனது அந்தக் கூச்சலைத் தொடர்ந்து கிடுகிடுக்கும் கதறல் எழுந்தது!

"ஐயையோ! ஐயையோ! செத்தேனே! செத்தேனே!" — யாருடைய குரல் அது? யாருடைய மரண ஓலம் அது?

தேவன் குரல் வந்த திக்கு நோக்கி தலை தெறிக்க ஓடினான்.

தங்கத் தம்பி அவன்—நிலை தடுமாறும் கோரக் காட்சி ஒன்றை அங்கே கண்டான்!

தலை முழுதும் இரத்தம் வெள்ளமென வழிந்தோட—இரக்கமற்ற 'அரக்கர்'களின் உள்ளத்தைப் போன்ற அந்த இருட்டு வழியிலே தள்ளாடித் தடுமாறி ஓடிவந்து கொண்டிருந்தார் அந்தக் குரலை எழுப்பியவர்—தேவனின் அப்பா!

"அப்பா!" என்ற தேவனின் அலறல் எங்கேயோ மோதி எதிரொலித்தது!

"தேவா! என் அருமை மகனே! உன் அப்பன் பிழைத்தது மறுபிறப்படா!......துரோகிகள் என்னைத் துண்டாட இருந்தார்களடா!......"

அதிர்ச்சியால் தாக்குண்ட அந்த இரண்டு உடல்களும் ஒன்றுக்கொண்டு துணைபோல இறுகக் கட்டித் தழுவிக்கொண்டன!

"நேற்றைப் போல் இன்றும் நான் ஆட்டத்தில் ஜெயித்தேன்—நூற்றுக் கணக்கு! குற்றமாம் அது! குறைமதி கொண்ட கொடியவர்கள், ஏமாற்றத்தால் கொலைகாரர்களாக மாறி விட்டார்களடா! நான் ஜெயித்த பணத்தைத் 'தொடாதே' என்று பறித்துக் கொண்டதோடு-தடுத்த என்னைத் தாக்கியும் விட்டார்கள்! சூதாடிகள்-என் உயிரைச்சூறையாடாமல் விட்டார்களே!..."

தேவன் விம்மி விம்மி அழுதான்!

★

"தொடாதே! தொடாதே! தேவா, அதைத் தொட்டால் உன் புனிதக் கரங்களில் கறை படிந்து விடும் கண்ணே!......"-முதல் நாள் பணம் வைத்தாரே அப்பா, அந்தப் பெட்டியைத் திறந்த தேவனைப் பார்த்து இப்படிக் கத்தினர் கட்டிலில் கட்டுகளோடு படுத்திருந்த அவர்!

"தொடுகிறேன்! ஆனால் நகை செய்து அணிந்து புன்னகை காட்ட அல்ல அப்பா! கெடுமதியைப் பிறப்பிக்கும் இந்தக் கேடுகெட்ட பொருளை வீசி எறிய—பின் நிம்மதி அடைய!" என்று சொல்லிக் கொண்டே பெட்டியைத் திறந்தான் தேவன்!

ஆனால்......என்ன ஆச்சரியம்! பெட்டி காலியாகக் கிடந்தது! ஆனால், அதிலே ஒரு துண்டுக் கடிதம் இருந்தது!

"பேரன்புடையீர்! நீங்கள் அன்புடன் அனுப்பிவைத்த ஆயிரம் ரூபாய் கிடைக்கப் பெற்றோம். உங்கள் கருணைச் செயலுக்கு—தாய்க் குலத்தின் பெருமைக்கு எங்கள் அனாதை மாணவர் இல்லம் நன்றி தெரிவிக்கிறது! எங்கள் இல்லம் காத்து வருகின்ற நூற்றுக் கணக்கான 'தேவன்களி'ன் எதிர்காலம் உங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறது.

—அனாதை இல்லத்தார்"

'புழுதி படிந்த பொருளை புனிதத் தன்மை அடையச் செய்தேன்; தவறல்லவே அது!' என்று ...ணையில் தேவனின் அம்மா ...கொண்டிருந்தார்கள்!

★ குறள் விளக்கக் கதை ★

★ தொடாதே! ★

குளக்கரை ஓரத்திலே நின்றுகொண்டு எதையோ இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் தேவன்! அப்படி அவனது சுழலும் விழிகளை ஓரிடத்திற்கழைத்து—ஏகப் பார்வையை கவர்ந்திழுத்துக் கொண்டிருந்த பொருள்தான் என்ன?

ஒரு தூண்டில்!

கொஞ்சமும் நகராமல் குளக்கரையில் அமர்ந்திருந்தான் அந்த மீன் பிடிப்பவன்! அவன் கையிலிருந்த தூண்டில் ஆடாமல் அசையாமல் நீரிலே கிடந்தது. அந்தத் தூண்டில் கயிற்றில் கட்டப்பட்டு — நீரில் மிதந்து கொண்டிருந்த 'நெட்டி'த் தட்டையின்மேல் கண்களிரண்டையும் பதித்துக் கொண்டிருந்தான் மீன் பிடிப்பவன். தூண்டிலில் 'மீன் சிக்கிவிட்டது — சுண்டி இழு' என்று அறிவிக்க வேண்டியது அந்தத் தட்டைதானே! அது அசைந்ததென்றால் ஒரு மீனின் உயிர் அழிந்ததென்று பொருளல்லவா?

ஆனால் அது அசையவே இல்லை. நேரம் ஓடிக் கொண்டிருந்தது. ஒளி மங்கிக்கொண்டு வந்தது. இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. தேவனால் அதற்குமேல் அங்கு நிற்க முடியவில்லை. பள்ளி சென்ற பாலகன் இருட்டியும் திரும்பவில்லையே—என்று அம்மா விழிகள் இரண்டையும் குளமாக்கிக் கொண்டு வீட்டு வாசலிலேயே காத்து நிற்பார்கள் என்பதை அவன் உணராதவன் இல்லையே!

தேவன் வேடிக்கை பார்ப்பதை அத்துடன் நிறுத்திவிட்டு வீட்டை நோக்கி ஓட்டம்பிடித்தான். அதே நேரத்தில் அந்த மீன் பிடிப்பவனும் எழுந்துவிட்டான். 'சனியன்! இன்றைக்கு என்ன கெட்ட காலமோ; ஒன்றுகூட சிக்கவில்லை! நாளைக்குப் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று ஏக்கத்தோடு தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டே அவன் நடையைக் கட்டினான்.

புத்தகப் பை தோளிலே ஊசலாட தன்வீட்டை நெருங்கிவிட்ட தேவன் அங்கே ஒரு வியக்கத்தக்கக் காட்சியைக் கண்டான். வழிமேல் விழி வைத்து வாசலில் காத்து நிற்கும் அம்மா எங்கே? 'வாடா கண்ணே!' என்று வாரியணைத்து உச்சி முகரும் அம்மாவை ஏன் வீட்டு வாசலில் காணோம்? தேவனால் எதுவுமே நினைக்க முடியவில்லை! வேகவேகமாக 'அம்மா!' என்று அழைத்துக்கொண்டே வீட்டிற்குள் ஓடினான்.

அங்கே அம்மா இருந்தார்கள்! ஆனால் அவர்கள் முகத்திலே ஏன் இத்தனை கலக்கம்?- 'ஈசி சேரி'ல் சாய்ந்து கொண்டிருந்த அப்பாவின் முகத்தில்தான் ஏன் அத்தனை குழப்பம்?

பேசாமல் இருந்த அப்பா திடீரென்று பேச ஆரம்பித்தார். "ஏன் இப்படி கப்பலைக் கடலில் மூழ்கடித்தவள்போல நிற்கிறாய்? என்ன வந்துவிட்டது இப்போது? போ, போ உள்ளே!...'' என்று இரைந்தார்.

அம்மா வாயை மூடிக்கொண்டு அடுப்பங்கரைக்குள் நுழைந்தார்கள். தேவனும் பின்னால் நுழைந்தான். அந்தக் குழப்பத்திற்கு என்னதான் காரணம் என்று அறியத் துடித்துக் கொண்டிருந்தவன், அதைத் தெரிந்ததும் தீயை மிதித்தவன் போல் துள்ளிக் குதித்து விட்டான்.

ஐயையோ! அவனது தந்தை இப்படித் தீயவழி புகுவார் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லையே! நேற்றுவரை நேரான பாதையிலே நடைபோட்டு—தான் உண்டு; தன் தொழில் உண்டு; தன் வீடுண்டு என்று தானே தடைபோட்டு வாழ்ந்தவர் இன்று அந்தக் கோணல் வழிக்கு எப்படித் தள்ளப்பட்டார்? எந்தத் தீயசக்தி அவரை அந்தப் படுகுழியிலே ஆழ்த்தி விட்டது?

தூண்டிலில் சிக்கிய மீன் தப்ப வழி இருக்கிறதா?

அதைப்போல் இந்தப் பாழும் சுழலில் சிக்கிவிட்ட தந்தை எப்படித்தான் தப்பப்போகிறார்? 'சூதுவலை'யிலே வீழ்ந்து விட்டவர் விழிப்புபெற எங்கிருக்கிறது வழி? அவரது விழிகள் ஏன் இப்படி மூடிக்கொண்டு விட்டன?

"ஐயோ, அப்பா!'' என்று வாய் விட்டு அழவேண்டும் போலிருந்தது தேவனுக்கு!

"ஆமாம் கண்ணே! இன்று மட்டும் உன் அப்பா நூறு ரூபாய்க்கு மேல் சீட்டாட்டத்தில் தோற்றுவிட்டாராமடா!'' — அம்மாவுக்கு இதைச்சொல்லும்போதே அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது!

ஆசை அபாயகரமானது என்பார்கள்! அதுவும் பண ஆசை பாழும் விளைவுகளை—பயங்கர முடிவுகளைத் தேடித் தரும் 'பிணமேடை' என்பார்கள்! அதிலும் இழந்ததை மீட்டுவிட வேண்டும் என்கிற ஆசை சாதாரணமானதாகவா இருக்க முடியும்? ஏமாற்றம் தூண்டி விடுகின்ற அந்த ஆசை சீற்றம் கொண்டது! வெறி பிடித்தது! விபரீதமானது!

தேவனின் தந்தையையும் அந்தப் பொல்லாத ஆசைதான் பிடித்துக் கொண்டது!

நூறு ரூபாய் இழந்தோம்; அதை மீட்டுவிட வேண்டும் என்று நினைத்து சூதுக் குகை புகுவார்; இருநூறு கிடைக்கும்!

போனது வந்ததே போதும்; போதுமென்ற மனம் இருக்காது; பேராசை தலைதூக்கும்; மீண்டும் ஆட்டத்தில் இறங்குவார்; அந்த இருநூறு மட்டுமல்ல; கையிலிருப்பது அத்தனையும் பறிபோகும்!

சூதுத்தலத்தின் இந்த ஒரே தத்துவத்தை நன்கு உணர்ந்தும் அந்த 'நாச'ப் பாதையை விட்டு நல்ல பாதையை நோக்கி நடக்கவில்லை தேவனின் அப்பா!

★

அன்று மாலை...

பள்ளியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த தேவனின் கால்கள் தானே அந்தக் குளத்தங்கரையை நோக்கி நடந்தன. தேவன் எதிர்பார்த்து வந்தது வீண் போகவில்லை. மீன் பிடிப்பவன் தூண்டிலைத் தண்ணீரில் செலுத்தி—விழிகளை தூண்டிலில் பதித்துக் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு நம்பிக்கை—இன்றாவது ஒரு மீன் கிடைக்காதா என்று!

தேவனும் அங்கேயே நின்றுவிட்டான். வீட்டுக்கு விரைவில் போக வேண்டுமே என்ற ஆர்வம் அவனிடம் இல்லை! அன்போடு வரவேற்கும் அப்பாவா அங்கு இருக்கிறார்? அவர் எந்த சூது மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாரோ, சிகரெட், பீடி புகை மண்டலத்திற்கிடையே! வீட்டில் இருந்தால்தான் என்ன? 'வாடா, கண்ணே!' என்று ஆசையுடன் அழைக்கும் மனநிலையிலா இருப்பார்? அந்த அப்பா மாறி பல நாட்கள் ஆகிவிட்டனவே! வீடுதான் இன்ப பூமி—மனைவி மக்களின் மகிழ்ச்சியே வாழ்வுப் பயன்—என்று எண்ணி வாழ்ந்து கொண்டிருந்த தந்தை மாண்டுபோய் விட்டாரே! இன்றைய சதிக் குழுவில் சிக்கிவிட்ட அவனது அப்பாவின் முகத்தில் பழைய அருள் இல்லை; அன்பு இல்லை; கனிவு இல்லை; இரவெல்லாம் கண் விழித்து இரத்தச் சிவப்பாகிவிட்ட கண்களில் எப்போதும் கோப ஜுவாலை வீசிக்கொண்டே இருக்கிறது! எதற்கெடுத்தாலும் சீறி விழுகிறார்! அது மட்டுமா? இதுவரை அந்தக் குடும்பத்திலே நடைபெறாதசெயல் ஒன்றும்—நச்சுப்பழக்கம் ஒன்றும் அடியெடுத்து வைத்து விட்டதே! கோபத்தால் கத்துவது மட்டுமல்ல; தேவனின் அம்மாவையும சில சமயங்களில் அடிக்கவே ஆரம்பித்து விட்டார் அப்பா! இந்தக் கொடுமையை—குடும்பத்து அமைதியைக் குலைத்து விட்ட கோரத்தைப் புகுத்திவிட்ட சூதாட்டப் பழக்கத்தைப் பலமுறை சபித்து விட்டார்கள் தேவனும், அம்மாவும்! ஆனால் அதன் மோகத்தில் வயப்பட்டு விட்ட தந்தை தன் வழியேதான் போய்க் கொண்டிருந்தார்.

—தேவன் இப்படி ஏதேதோ எண்ணிக் கொண்டே நின்று கொண்டிருந்தபோது ஒரு திடுக்கிடும் சம்பவம் அங்கே நடந்தது.

குளத்து நீரிலே மிதந்து கொண்டிருந்த தூண்டிலின் நெட்டித் தட்டை அசைந்தது. அதுமட்டுமல்ல; கொஞ்சம் நீருக்குள்ளும் இழுக்கப்பட்டது. ஆமாம்; தூண்டில் முனையில் இரும்பு முள்ளில்—சேர்க்கப்பட்டிருக்கும் ஒரே ஒரு பருக்கை உணவைக் கவ்வி விட்டது பரிதாபத்திற்குரிய மீன் ஒன்று!

மீன் பிடிப்பவன் 'ஆ...ஹையா!' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு தூண்டிலை பலங்கொண்ட மட்டும் சுண்டி இழுத்தான்! தூண்டில் முள்ளில் சிக்கிவிட்ட அந்த மீனும் நீருக்குமேலே இழுக்கப்பட்டது!

※ 10-ம் பக்கம் பார்க்க

ஆசை பொல்லாதது என்பார்கள்!

அது உண்மையா?

முக்காலும் உண்மைதான்!

ஒரே ஒரு பருக்கை உணவின்மேல் கொள்ளும் ஆசை ஓர் உயிரையே கொல்லுமே, தெரியுமா உங்களுக்கு?

தூண்டிலில் சிக்கிச் சாகும் பரிதாபத்திற்குரிய மீனைப் பற்றித்தான் சொல்கிறேன்!

பருக்கை உணவின்மேல் ஆசையே இப்படி என்றால்—பணக் குவியலின்மேல் கொள்ளும் ஆசை...?

பதில் தருகிறார் வள்ளுவர் :

வேண்டற்கவென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று!

—இந்தக் குறள் அந்த ஆசை ஆபத்தானது என்கிறது; இந்தக் கதை அந்தக் குறளின் அழகை விளக்குகிறது!



எஸ். வரதுண பாண்டி;
திருநெல்வேலி

(?) காந்தியார் மறைந்தவுடன், அவரது நினைவாக இந்த தேசத்துக்குக் காந்தி ராஜ்யம், மதத்துக்கு காந்தி மதம்—என்று பெயர்வைக்க வேண்டுமென்று பெரிய பெரிய அறிக்கைகள் விட்ட தலைவர் யார்?

அறிக்கைகள் மட்டுமல்ல; காந்தியார் மறைந்தவுடன் அவரது ஞாபகமாகப் பல இடங்களில் காந்தி என்று குழந்தைகளுக்குக்கூட பெயர்வைத்த பெருமை நமது தென்னாட்டு மாபெரும் தலைவர் பெரியார் ராமசாமி அவர்களுக்கே உரியதாகும்.

சிற்றம்பலம்; கோனேரிராசபுரம்

(?) காந்தியால்தான் நாட்டுக்குக் கேடு ஏற்பட்டது என்று கூறி அவரது சிலையை உடைப்பவர்கள், காந்தியைக் கொன்ற கோட்சேயுக்கு என்ன செய்வார்கள்?

சிலை நாட்டுவார்கள்; படம் திறப்பார்கள்—அல்லது குறைந்த பட்சம், கோட்சே தூக்கிலிடப்பட்டதின் நினைவாக வீட்டுக்கு வீடு மாரடித்துக்கொண்டு அழும்படியாகவாவது அறிக்கை விடுப்பார்கள்.

நாவுக்கரசன்; வேலூர்

(?) காந்தி சிலை உடைப்புப் போராட்டத்தில் தலைவர் பெரியார் அவர்கள் எந்த ஊரிலுள்ள சிலையை உடைப்பார்?

உங்கள் வேலூரில் உள்ள காந்தி சிலையைத் தான் உடைப்பார். ஏனெனில் அது தானே அண்ணா அவர்களால் திறந்துவைக்கப்பட்ட சிலையாகும்.

வி. கந்தசாமி; குளித்தலை

(?) கலப்பை பிடிக்கத் தெரியாதவர்கள் நங்கவரம் அறப்போரில் குதிப்பதாகச் சொல்கிறார்கள் என்று ஒரு நண்பர் பேசினாரே; அதுபற்றி உமது கருத்து என்ன?

தூரிகை பிடித்து வர்ணம் பூசத் தெரிந்தவர்கள்தான் இந்தி அழிப்பு, பிராமணாள் எழுத்து அழிப்பு— இவைகளில் கலந்துகொள்ள வேண்டுமென உங்களிடம் வரம்பு ஒன்றுமில்லையே என்று அந்த நண்பரிடமே தாங்கள் கூறலாமே!

பி. கருத்திருமாரன்; சிவகங்கை

(?) நங்கவரம் விவசாயிகளின் குறைந்த பட்ச கோரிக்கையைக்கூட அரசாங்கம் கவனிக்காமல் அலட்சியப்படுத்தியதின் காரணமென்ன?

விவசாயிகளிடம் வெள்ளையாக இருப்பதெல்லாம் எலும்பு!

பண்ணையாரிடம் வெள்ளையாக இருப்பதெல்லாம் வெள்ளிப் பணமன்றோ!

செந்தில்வேல்; சென்னை—13

(?) நங்கவரம் அறப் போராட்டம் எந்த முறையில் நடைபெறும்? எது வரையில் நடைபெறும்?

வெற்றிகிட்டும் வரையில் நடைபெறும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளுக்குச் சிறிதும் குந்தகம் விளையாமல் அமைதியான வழியில் அறப்போர் நடைபெறும். தி. மு. கழகம் நடத்துகிற போராட்டங்களிலும், அதன் அனுதாபத்தோடோ அல்லது ஆதரவுடனோ நடைபெறும் போராட்டங்களிலும் அமைதியும், கண்ணியமும் தலைதூக்கி நிற்கும் என்பதை யார்தான் மறுக்க முடியும்! நல்லதொரு காரியத்துக்கு நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்வோம் என்ற வீர சபதத்தோடுதான் விவசாயிகள், கழனியிலே களம் அமைக்கிறார்கள்.

கே. தமிழரசு; திருச்சி

(?) சுதந்திரப்போர் நூற்றாண்டு விழாவில் கட்டபொம்மன், மருதபாண்டியர், வ. உ. சி— போன்ற தென்னகத்துத் தலைவர்களுக்கு சிறப்பான நினைவுச் சின்னங்கள் நிறுவவில்லையே; ஏன்?

'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்பதைக் கிண்டல் செய்கிற, தடித்ததோலர்களுக்கு இதைக் கண்டாவது புத்தி வரட்டுமே என்ற நல்ல நோக்கத்தோடு வடநாட்டு ஏகாதிபத்யம் மேற்கண்ட பட்சபாதக் கொள்கையைக் கடைப்பிடித்திருக்கலாம்.

(?) தன் கணவன் இறந்ததால் தன் நாட்டை ஆங்கிலேயர் வசமாக்க முனைந்ததை எதிர்த்த ஜான்சிராணி, சுதந்திரப்போரின் விடிவெள்ளியாகப் போற்றப்படும்பொழுது பாஞ்சாலங்குறிச்சியில் பரங்கியர் கால்படக் கூடாது என முரசு கொட்டிய கட்டபொம்மன், ஏன் அந்த விடுதலை வீரர் வரிசையில் அதிகாரப் பூர்வமாக சேர்க்கப்படவில்லை?

அவர்கள் வகுத்துக்கொண்ட நூறு வருடக் கணக்கிற்குள் கட்டபொம்மனின் விடுதலைப் போர் வரவில்லையாம். அப்படி வராததற்குக் காரணம் விடுதலைப் போரின் துவக்கத்தை அவர்கள் வடநாட்டிலேயிருந்து கணக்கெடுத்ததுதான்! ஜான்சி ராணிக்கு முன்பு ஒரு தென்னாட்டு கட்டபொம்மன் வெள்ளைக்காரர்களை எதிர்க்கலாமா? அது பெரிய "பாவம்" என்று கருதுகிறார்கள் வடக்கத்தியார்!

(?) மனிதன், இறப்பதற்காகப் பிறக்கிறான்; சரிதானா?

இறப்பதற்காகப் பிறக்கலாம்; ஆனால் மறுபடியும் பிறப்பதற்காக அவன் இறப்பதில்லை.

(?) விவசாயிகள் நங்கவரத்தில் நடத்தப் போகும் போராட்டத்தில் நாள் ஒன்றுக்கு எத்தனை பேர் சிறை செல்வார்கள்?

சிறை செல்வதற்காகப் போராட்டம் நடத்தப்படவில்லை. வயலில் தங்களுக்குள்ள பாடுபடும் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளவே அறப்போர் துவங்குகிறது. உரிமைக்குப் போரிட ஒரு நாளைக்கு நூறு பேர் கூட களத்தில் இறங்குவார்கள். அவர்களில் எத்தனை பேரை அதிகார வர்க்கம் கூண்டில் அடைக்குமோ, யார் கண்டது!

முக்கிய அறிவிப்பு

வரும் 23—8—57 முதல் குளித்தலை வட்ட நங்கவரத்தில் உழவர் அறப் போர் துவங்குகிற காரணத்தால், நான் தொகுதியில் தங்க வேண்டியிருப்பதை முன்னிட்டு ஒத்துக் கொண்டுள்ள வெளியூர் பொதுக் கூட்டங்கள், திருமணம், சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் முதலியவற்றில் கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துவதோடு, விரைவில் வேறு தேதிகள் தந்து கலந்து கொள்கிறேன் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

கலைவாணர் உடல் நிலை!

உடல் நிலை குன்றி, சென்னை உயர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களது உடல் நிலை இப்போது வெகுவாக முன்னேறி வருகிறது.

விரைவில் அன்னார் பூரண குணம்பெற்று விடுவார்கள் என்று மருத்துவர்கள் அறிவிப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆர். வி. கோபால்

நாகை வட்டாரத்து திராவிடர் கழகத் தலைவரும், விவசாயிகளிடையே நற்பணியாற்றியவரும், நாடகக் கலை மூலம் நற்கருத்துக்களைப் பரப்பலாம் என்ற நல்லெண்ணத்தோடு நாகை திராவிட நடிகர் கழகங் கண்டவரும், கொள்கையில் உறுதியும் அசையாத நம்பிக்கையுங் கொண்டு செயலாற்றியவருமான நமது பெருமதிப்புக்குரிய தோழர் ஆர். வி. கோபால அவர்கள் இயற்கையெய்திய செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அவரால் திராவிடர் இயக்கம் நல்ல வளர்ச்சி பெற்றது. கட்சிக்கெனத தனது காலம், பொருள், உழைப்பு அத்தனையும் செலவிட்டார். தானே நாடகங்களில் நடித்து அதன் மூலமும் கொள்கைப் பணி புரிந்தார். அத்தகைய நல்லவரின் இழப்பு தோழர்களுக்கும், உறவினர்களுக்கும் நமக்கும் பெரும் அதிர்ச்சியைத் தந்ததில் வியப்பில்லை.

அவரது நண்பர்களுக்கும், குடும்பத்தாருக்கும், குறிப்பாக அவரது இளவல் டாக்டர் விசயராகவன் அவர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

—ஆசிரியர்

வருந்துகிறோம்

லால்குடி திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் பி. வி. பாலசுப்ரமணியன் அவர்கள் 12—8—57-ல் இயற்கை யெய்தினர் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம். மரணச் செய்தி கேட்டதும் லால்குடி தி. மு. கழகத் தோழர்களும், சுற்று வட்டார தி. மு. கழகத் தோழர்களும், திருச்சி மாவட்டச் செயலாளர் தோழர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் சென்று மாலை அணிவித்து இறுதி மரியாதையை செலுத்தினர். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.